வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 21.12.2024 சனிக்கிழமை இதழ் : 355 பக்கங்கள் : 12




# சித்திரை புத்தாண்டுக்கு முன் உள்ளூராட்சி சபைத் தேர்தல்!

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, டிசெம்பர் 21**
**உள்ளூராட்சிமன்ற தேர்தல் அடுத்த வருடம் சிங்கள, தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக நடத்தப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**





நேற்று வெள்ளிக்கிழமை கண்டிக்கு விஜயம் செய்தபோதே ஜனாதிபதி இதனை கூறினார்.

மாகாண சபைத் தேர்தலும் அடுத்த வருடத்திற்குள் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்.

முதலில் மல்வத்து விகாரைக்கு சென்ற ஜனாதிபதி மல்வத்து மகாநாயக்க தேரர் வணதிப் பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து அவரிடம் நலம் விசாரித்ததுடன் சிநேகபூர்வமாக 11

# எட்கா ஒப்பந்தம் குறித்து இணக்கம் எதுவுமில்லை!

## அநுர அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 21
"எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு விட்டது என வங்குரோத்தடைந்த அரசியல்வாதிகள் போலி பிரசாரம் முன்னெடுத்துவரு கின்றனர். அவ்வாறு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. எட்கா தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவும் இல்லை."

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், எட்கா ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுகளை தொடரவே இணக்கம் தெரிவிக்கப்பட்டது எனவும், மாறாக அவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதேவேளை, இலங்கைக்கும், இந்தியாவுக்கும் 11

# அரசியல்வாதிகளுக்கு மதுபான உரிமத்தை வழங்கும் கலாசாரம் நிறுத்தப்படவேண்டும்!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, டிசெ. 21
சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதாக கூறிக்கொண்டு அரசியல்வாதிகளுக்கு மதுபான உரிமப் பத்திரங்களை வழங்கிய கலாசாரம் நிறுத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை மது ஒழிப்பு பேரவையின் புதிய அலுவலக திறப்பு விழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நமது நாட்டின் சமூக ஒழுங்கு குறித்து உண்மையான யதார்த்தமான புரிதலை நாம் கொண்டிருக்க வேண்டும். இதை விடுத்து வெறுமனே பேசக் கூடாது.

நமது நாட்டில் டொலருக்கு கடும் தட்டுப்பாடு 11

# கிளிநொச்சியில் ஒருவருக்கு மலேரியா!

கிளிநொச்சி, டிசெ. 21
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மலேரியா நோயுடன் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்பு வைத்தியர் தெரிவித்தார்.

தொற்று ஏற்பட்ட நபர் ஆபிரிக்க நாடான கானாவிலிருந்து வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காய்ச்சல் ஒட்டுண்ணிகளால் ஏற்படுவதுடன் பெண் அனோபிலிஸ் நுளம்புகள் கடிப்பதால் மக்களுக்கு பரவுகிறது.

மலேரியாவின் அறிகுறிகள் பொது வாக 10-15 நாட்கள் கொசு கடித்த பிறகு தோன்றும். அறிகுறிகளாக காய்ச்சல், தலைவலி போன்றன ஏற்படும். (அ)

# முன்னாள் எம்.பி. திலீபன் கைது!

வவுனியா, டிசெ. 21
ஈ.பி.டி.பியின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட நிதி மோசடி குற்ற விசாரணைப் பிரிவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

காணி பெற்றுத் தருவதாகக் கூறி நபர் 11

# வாஸ் குணவர்த்தனவுக்கு மரண தண்டனை உறுதி

கொழும்பு, டிசெ. 21
கோடீஸ்வர தொழிலதிபர் முகமது ஷியாம் கொலை தொடர்பில் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட ஐந்து பிரதிவாதிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய அமர்வு விதித்த மரண தண்டனையை, உயர் 11

# 13 குறித்து இந்திய அரசுடன் பேசும் தேவை வரவில்லை!

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 21
இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளதால் அது குறித்து இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்து தெளிவூட்டும் வகையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று 11

# மண்கும்பானில் நடந்த விபத்தில் இளைஞர் ஸ்தலத்தில் உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 2
மண்கும்பான் - கறுப்பாச்சி அம்மன் கோவிலடி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார்.

ஊர்காவற்துறைப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கார் மீது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற சாரதி உயிரிழந்துள்ளதுடன், 11

# இலங்கையின் அண்மைய வரி திருத்தங்கள் மீளாய்வு


## சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, டிசெ. 21
இலங்கை முன்மொழிந்துள்ள வரி திருத்தங்கள் சர்வதேச நாணய நிதியத்தால் மீளாய்வு செய்யப்படும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான திட்டத்தின் மூன்றாவது மீளாய்வு சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்படவுள்ளது.

இந்த மதிப்பீட்டின் முழு விவரங்களும் சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள் அறிக்கையில்

சேர்க்கப்படும் என சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் துறையின் இயக்குநர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார். (அ)



மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரம், டான் தொலைக்காட்சிக் குழுமத்தால், மின் விளக்குகளைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டு, நேற்று மாலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அருட்தந்தை லெஸ்கி ஜெயகாந்தன் மற்றும் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எந்திரி என்.சிவலிங்கம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு, மின் அலங்காரத்தை ஒளிரச் செய்தனர். (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் கூட்டணிக்குள் விரிசல் கதிரையில் செல்லும் பங்காளிகள்

கொழும்பு, டிசெ. 21

**பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் சிலிண்டனர் சின்னத்தின் கீழ் போட்டியிட்ட பங்காளிக் கட்சிகள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கதிரை சின்னத்தில் தனித்து போட்டியிட முடிவுசெய்துள்ளதாக தெரியவருகிறது.**

சுதந்திரக் கட்சியின் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடல் ஒன்றில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்கும் சு.க உட்பட பல கட்சிகள் ஐ.தே.கவின் கூட்டணியின் கீழ் போட்டியிட விரும்பவில்லை என்பதால் இந்த முடிவை எடுத்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் உட்பட எதிர்காலத்தில் அனைத்து தேர்தல்களிலும் யானைச் சின்னத்தில் போட்டியிட ஐ.தே.க தீர்மானித்துள்ளது. இதனால் புதிய ஜனநாயக முன்னணிக்குள் பல்வேறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. தேசிய பட்டியல் விவகாரத்திலும் இக் கூட்டணிக்குள் கருத்து மோதல் ஏற்பட்டதால் பங்காளிக் கட்சிகள் இந்த முடிவை எடுத்துள்ளன.

அதன் பிரகாரம் எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலில் கதிரை சின்னத்தில் இக்கட்சிகள் போட்டியிட உள்ளன. இதுகுறித்த அறிவிப்பையும் புதிய கூட்டணி தொடர்பான அறிவிப்பையும் சு.க விரைவில் வெளியிட உள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

# வவுனியா மருத்துவமனையில் நாய் ஒன்று சுட்டுக்கொலை!

## பாதுகாப்பு உத்தியோகத்தர் வெறிச்செயல்

வவுனியா, டிசெ.21

வவுனியா மருத்துவமனையில் நாய் ஒன்று வாயு துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டது.

இந்த மருத்துவமனையில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு சுட்டுக்கொலை செய்துள்ளார்.

மருத்துவமனையின் பிரேத அறை அருகில் நின்ற நாய் மீதே பாதுகாப்பு உத்தியோகத்தர் தன்னிடம் இருந்த வாயு துப்பாக்கியை பயன்படுத்தி சுட்டுக் கொன்றதாக தெரியவருகிறது.

இதனால் காயமடைந்த நாய் இரத்தம் சிந்த இழுபட்டு சென்று வேலி ஓரமாக உயிரிழந்தது. குறித்த சம்பவம் தொடர்பில் நாய் காப்பகம் ஒன்றை நடத்தி வருபவர் மருத்துவமனை பணிப்பாளரிடம் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். இது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பணிப்பாளர் உறுதியளித்துள்ளார். (எ-10)

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் ஊழலுக்கு அடிமையாகியுள்ளதா?

## கேள்வி எழுப்புகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், டிசெ. 21

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தாவிட்டால் அதனை மாற்றத்துக்கான அரசாங்கமாகக் கருதமுடியாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் அரசியலமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என வேறொரு நாடு வலியுறுத்துவதானது, இலங்கைக்கு ஓர் அவமதிப்பு எனவும் அவர் குறிப்பிட்டார்.



அத்துடன் மதுபானச்சாலை அனுமதிப்பத்திரத்துக்கு பரிந்துரை செய்தவர்களின் பெயர்களை வெளியிடாமல் பின்னடிப்பு செய்வதனால் இந்த அரசாங்கமும் ஊழலுக்கு அடிமையாகி உள்ளதா என்ற சந்தேகம் தோன்றுவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# அங்கீகரிக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டும் பன்றி இறைச்சி கொள்வனவு

கொழும்பு, டிசெ. 21

ஆபிரிக்க தொற்றுக்குள்ளான பன்றிகள் இறைச்சியாக்கப்பட் டுள்ளனவா என்பது தொடர்பில் சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொண்டதன் பின்னரே பன்றி இறைச்சி சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாகவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்ட இடங்களில் மாத்திரம் இறைச்சி கொள்வனவு செய்யுமாறும் அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுசிர பிரியசிறி தெரிவித்தார்.

அதனால், பன்றி இறைச்சியை அச்சமின்றி உணவுக்காக கொள்வனவு செய்ய முடியுமென்றும் இது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவில் சுகாதார நடைமுறைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலின் காரணமாக பன்றி இறைச்சி உற்பத்தியில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

பன்றி பண்ணைகளிலுள்ள நோயினால் பன்றிகள் உயிரிழந்தன. பன்றி இறைச்சி உற்பத்தியாளர்களுக்கும் பொருளாதார ரீதியான சிக்கலும் ஏற்பட்டது.

இந்த தொழிற்றுறையை வழமைக்கு கொண்டுவருவதற்காக அமைச்சினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிலில் ஈடுபட்டவர்கள் பெருந்தொகை கடனையும் பெற்றுக்கொண்டுள்ளனர். வேலைவாய்ப்புகளை இழந்துள்ளனர்.

இதற்காக நேற்று முன்தினம் விசேட குழு நியமிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில், மிக விரைவில் இந்த தொழிற்றுறையை வழமைக்கு கொண்டு வருவதற்காக பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

நாத்தார் பண்டிகை காலத்தில் பொதுவாகவே பன்றி இறைச்சிக்கான நுகர்வும் அதிகரித்தே காணப்படும். பன்றி இறைச்சியை உட்கொள்வது தொடர்பில் அச்சப்பட வேண்டியதில்லை.

இதுவரையில், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் ஆரோக்கியமான பன்றி பண்ணைகள் மற்றும் ஆரோக்கியமற்ற பன்றி பண்ணைகளை அடையாளங்கண்டு வருகின்றன. - என்றார். (அ)

# நெவில் சில்வாவுக்கு மறியல்

கொழும்பு, டிசெ. 21

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வாவை எதிர்வரும் டிசெம்பர் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நெவில் சில்வா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த டிசம்பர் 9 ஆம் திகதி பொலிஸ் களப் படைத் தலைமையகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பின்னர் நீதிவான் உத்தரவுக்கு அமைவாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்கும் போது அவர் புகார் தாரரிடம் பக்கச்சார்பான முறையில் நடந்து கொண்டதாக எழுந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த கைது இடம்பெற்றது.

விசாரணையின் போது நெவில் சில்வா, கடத்தல் மற்றும் தவறான சிறையில் அடைக்கப்பட்ட சம்பவத்திற்கு உதவியமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 21

நெடுந்தீவு கடற்பரப்பில் இம்மாதம் 8ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 8 பேருக்கும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்ட மீனவர்களது வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, கைது செய்யப்பட்ட 8 மீனவர்களும் சிறைச்சாலை அதிகாரிகளால் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், அவர்கள் எண்மரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்றத்தின் பதில் [illegible]

# பளையில் துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 21

நாட்டு துப்பாக்கியுடன் 19 வயதான இளைஞன் கைது செய்யப்பட்டார்.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலி பகுதியில் நாட்டு துப்பாக்கியுடன் 19 வயதான இளைஞர் ஒருவர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காலி சிறைச்சாலைக்குள் இரண்டு குழுக்கள் மோதல்

## 4 பேர் வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, டிசெ. 21

காலி சிறைச்சாலையில் இரண்டு குழுக்களுக்கிடையில் இன்று இடம்பெற்ற மோதலில் 4 பேர் காயமடைந்த நிலையில், பூஸா சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கரந்தெனிய சுத்தாவின் ஆதரவாளர்கள் மற்றும் வெளிநாட்டில் பதுங்கியிருப்பதாகக் கூறப்படும் கஞ்சிப்பான இம்ரானின் ஆதரவாளர்கள் குழுவுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகக் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்டியாகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களும் காயமடைந்தவர்களில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 'கிளீன் சிறிலங்கா' திட்டத்தில் தமிழ், முஸ்லிம்கள் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ. 21

'கிளீன் சிறிலங்கா' திட்டத்தை நடைமுறைப் படுத்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

18 பேர் கொண்ட இந்த செயலணியில் ஒரு சிறுபான்மை பிரதிநிதியைகூட உள்ளடக்க முடியாதா என கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

'கிளீன் சிறிலங்கா' திட்டம் என்பது வெறுமனே நாட்டை சுத்தமாக்கும் திட்டம் மாத்திரமல்ல என்றும் அது ஒட்டுமொத்தமாக நாட்டு மக்களின் மனநிலை, அவர்களது கருத்துகள் மற்றும் எண்ணங்களை மாற்றும் திட்டமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறியிருந்தார்.

சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை ஏற்படுத்தும் செயல்பாடுகள் இத்திட்டத்தில் உள்வாங்கப்படும் பட்சத்தில் இங்கு அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் பங்களிப்பு அவசியம் என சமூக வலைத்தளங்களில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.12.2024 சனிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## கனடாவிடம் முறையிடுதல்

அதிகமான புலம்பெயர் ஈழத் தமிழர்கள் கனடாவில் வாழ்கின்றனர். முப்பது வருடங்களுக்கு முன்னர் அங்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் சிறந்த பொருளாதார நிலையில் வாழ்கின்றனர். அவர்களது அடுத்த தலைமுறை கனடிய அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தும் நிலைக்கு உயர்ந்திருக்கின்றது. தற்போதுள்ள ரூடோ அரசாங்கத்தில் புலம்பெயர் தமிழர் ஒருவர் அமைச்சராகவும் இருக்கின்றார். இவைகள் எல்லாம் கனடா வாழ் புலம்பெயர் தமிழர்களின் கடின உழைப்புக்கு கிடைத்த வெகுமதி என்றால், அது மிகையில்லை.

ஒரு தனிமனிதரின் வளர்ச்சி என்னும் கண்ணோட்டத்தில் நோக்கினால் ஒவ்வொருவரது வாழ்விலும் அவர்கள் வெற்றிபெற்றிருப்பதாக கூறிக்கொள்ளலாம். ஆனால், ஒரு சமூகமாக நோக்கினால் மேற்குலக நாடுகளில் வாழ்கின்ற போதும், உலக அதிகார அரசியல் சூழலையும் அதன் போக்குகளையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை பெற்றிருந்தும் கூட, புலம்பெயர் தமிழ் தலைமுறையினர் எதனையும் கற்றுக்கொள்ளாத வர்களாகவே இருக்கின்றனர். அரசியல் ரீதியில் இயங்கும் ஒரு குறிப்பிட்ட புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்களை எடுத்து நோக்கினால், அவர்களில் அனேகர், யாழ். குடாநாட்டு கிடுகு வேலிக்குள் இருந்து சிந்திப்பவர்களாகவே இருக்கின்றனர்.

ஈழப் போர் இடம்பெற்ற காலத்திலும் சரி, அந்தப் போர் மோசமான அழிவுகளுடன் முடிவுற்ற பின்னரும் சரி, கடந்த காலத்திலிருந்து எதனையும் கற்றுக்கொள்ள முயற்சிக்காதவர்களாகவே பெரும்பாலானவர்கள் இருக்கின்றனர். இந்தளவு புலம்பெயர் அமைப்புக்களும் ஆரவாரங்களும் (முன்னரோ இப்போதிருப்பதை விடவும் அதிகம்) இருந்த போதுதானே, இத்தனையாயிரம் பொது மக்கள் இறுதி யுத்த வலயத்திற்குள் முடங்கிப் போய், உயிரை மாய்த்தனர். புலம்பெயர் சமூகத்தினால் அவர்களின் அழிவை தடுத்து நிறுத்த முடியவில்லையே - இதிலிருந்து கற்றுக்கொண்டல்லவா இருந்திருக்க வேண்டும். ஆனால், இப்போதும் கற்றுக்கொள்ளாமல் இருப்பதை என்னவென்பது?

உலக அரசியலில் கனடாவுக்கு முக்கியமான இடமில்லை. கனடா பணக்கார நாடாக இருக்கலாம். ஆனால், அதற்கு உலக மூலோபாய அரசியலில் எந்தவொரு தலையீட்டையும் செய்ய முடியாது. தற்போதுள்ள ரூடோ தலைமையிலான கனடிய அரசாங்கம் வெளிவிவகாரக் கொள்கையில் பெண்ணிய கொள்கையை கடைப்பிடிக்கின்றது. உலக விடயங்களில் அமெரிக்காவின் வெளிவிவகார அணுகுமுறைக்கு மாற்றான தீர்மானங்களை கனடாவினால் எடுக்க முடியாது. அமெரிக்காவைத் தவிர தெற்காசிய அரசியல் விடயங்களில் தலையீடு செய்யும் வல்லமையுள்ள ஒரு மேற்குலக நாடு இல்லை.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவை ஒரு மாநிலம் என்றவாறு குறிப்பிட்டிருக்கின்றார். அந்தளவுக்கு அமெரிக்காவின் நிழலிலிருந்து வெளிச் செல்ல முடியாத நாடு. ஒரு மேலாதிக்க சக்திக்கு அருகில் இருக்கின்ற சிறிய நாடுகள் அப்படித்தான் இருக்க முடியும். ஆனால், அதிகளவான புலம்பெயர் தமிழர்கள் வாழ்கின்ற காரணத்தினால் அவர்களின் வாக்குகள் தேவையான அரசியல் வாதிகள், சில வாக்குறுதிகளை வழங்குவதுண்டு. ஆனால், அவற்றால் வெளியுலகில் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. வேண்டுமானால், கனடாவில் அதிகமாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிகளை கட்டலாம். தவிர, பொருளாதார ரீதியிலும் இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கக் கூடிய வல்லமை கனடாவுக்கு இல்லை.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டுதான் தமிழ் அரசியல்வாதிகள் செயலாற்ற வேண்டும். கடந்த பதினைந்து வருடங்களாக எத்தனை முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன - அவற்றால் ஏதாவது முன்னேற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றதா? வெளியாரிடம் முறையிடுவதற்கு முன்னர், உள்ளுக்குள் தங்களை ஒழுங்குபடுத்தும் காரியங்களைத்தான் தமிழ் அரசியல்வாதிகள் முன்னெடுக்க வேண்டும். உள்ளுக்குள் பலவீனமாக இருந்து கொண்டு எவரிடம் முறையிட்டாலும், அது ஒரு மாலைநேர தேனீர் சந்திப்பாக மட்டுமே இருக்கும்.

## யாழில் நிமோனியா காய்ச்சலால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாணத்தில் நிமோனியா காய்ச்சலால் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

யாழ். ஆனைக்கோட்டை சாவல்கட்டுப் பகுதியைச் சேர்ந்த 46 வயது குடும்பஸ்தர் ஒருவருக்கு இரண்டு நாட்களாக காய்ச்சல் நீடித்த நிலையில் அவர் மருத்துவ ஆலோசனைகளைப் பெறாதிருந்தார்.

இந்த நிலையில் குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் திடீரென மயக்க முற்றார். இதனையடுத்து அவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மரணம் தொடர்பிலான விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற் கூற்றுப்பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

இந்த நிலையில் குறித்த மரணம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உடற் கூற்றுப் பரிசோதனையில் நிமோனியா காரணமாகவே மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (எ)

### மாயமாகும் மரக்கறிகள்

## தீர்வு கோரி வியாபாரிகள் போராட்டம்

கிளிநொச்சி, டிசெ.21

மரக்கறிகள் திருட்டுப் போவதால் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி கிளிநொச்சி, இரணைமடு சந்தை வியாபாரிகள் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட இரணைமடு சந்திக்கு அருகில் உள்ள பொதுச் சந்தையில் எந்தவொரு பொது வசதிகளும் இல்லை எனவும் பாதுகாப்பு இன்மையால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் கூறினர். இது தொடர்பில் பல தடவைகள் பிரதேச சபையிடம் முறையிட்டும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக சந்தை வளாகத்தில் சரியான முறையில் வடிகால்கள் இல்லை, வளாகத்தில் உள்ள கட்டடத் தொகுதிகளுக்கு சரியான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. ஐந்து முறை பொருட்கள் திருடப்பட்ட நிலையிலும் இவற்றை உரிய முறையில் சீர் செய்து தரும்படி கோரியும், காவலாளி ஒருவரை நியமிக்க கோரியும் இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தை விவசாயிகள் மேற்கொண்டனர். (எ)

## பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஒளிவிழா





வடமராட்சி, டிசெ. 21

பருத்தித்துறை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் 2024ஆம் ஆண்டிற்கான ஒளிவிழா நிகழ்வு பிரதேச செயலக நலன்புரிச் சங்க தலைவரும் கணக்காளருமான ம. சிவகுமாரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நத்தார் தீப ஒளியூட்டலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை அஞ்சலக இயக்குநர் அருட்பணி ஞா. வென்ஸஸ்லோஸ் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு கிறிஸ்மஸ் நற்செய்தியையும் வழங்கினார். மேலும் இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக மெதடிஸ்த திருச்சபை குருமுதல்வர் அருட்பணி நிச்சட் ஜோதி சொருபன் மற்றும் பருத்தித்துறை மறைக்கோட்ட மறையாசிரியர் அ. ம. ஜெயசீலன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக நலன்புரிச்சங்க போசகரும் பிரதேச செயலாளருமான சிவபாதசுந்தரம் சத்தியசீலனும் கலந்து சிறப்பித்தனர்.

சிறுவர்களின் கலை நிகழ்வுகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கரோல் கீதங்கள், பாடல்கள் இடம்பெற்றதுடன், நத்தார் தாத்தா வருகையுடன் சிறுவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டு கிறிஸ்மஸ் நத்தார் இசையுடன் விழா சிறப்பாக நிறைவு பெற்றது. (எ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 21 சனிக்கிழமை
குரோதி வருடம் - மார்கழி 06
நல்ல நேரம்: 7.31 - 9.00
ராகு காலம்: 9.00 - 10.30
திதி : ஷஷ்டி




**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். உதவி கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உறவினர்கள், நண்பர்களில் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். முன்னேறும் நாள்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். பிரபலங்கள் உதவுவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**விருட்சிகம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். சாதிக்கும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையும் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். பிள்ளைகளிடம் கோபத்தை காட்டாதீர்கள். அலட்சியம் வேண்டாம்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள்.

**மீனம்**
சமயோசிதமாகவும், சாதுர்யமாகவும் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். அமோகமான நாள்.

# யாழ். போதனா மருத்துவமனை காவலாளியை கடித்தவர் கைது

## மதுபோதையில் ரகளை

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் மது போதையில் நுழைந்த நபர் காவலாளியை கடித்து காயப்படுத்திய சம்பவமொன்று இடம்பெற்றது.

மதுபோதையில் நோயாளர் விடுதிக்குள் நுழைய முற்பட்டவரை மருத்துவமனை காவலாளி தடுக்க முற்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதையடுத்து குறித்த நபர் காவலாளிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

காயமடைந்த காவலாளி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம்பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

### கொடிகாமம் நாவலடி கிராம மக்கள் முறைப்பாடு

# வெள்ளம் தேங்கி நிற்கும் பிரதேசத்தை பார்வையிட்டனர் ரயில்வே அதிகாரிகள்



யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ். கொடிகாமம் நாவலடி பகுதியில் வெள்ளம் வடிந்தோடாது தேங்கி நிற்கும் பிரதேசத்தை புகையிரத திணைக்கள் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

வெள்ளம் தேங்கி நிற்பதால் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து அப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்திருந்தனர். அத்தோடு, வெள்ளத்தை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனையடுத்தே வெள்ளம் வெளியேற முடியாது தேங்கி நிற்கும் இடங்களை பார்வையிட்ட அதிகாரிகள், மக்களுடன் கலந்துரையாடியதுடன் இனிவரும் காலங்களில் வெள் ளம் தேங்கி நிற்காது வடிந்தோ டுவதற்குரிய ஏற்பாடுகளை செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளனர். (எ)

# விவசாயிகளுக்கு உரத்துக்கான கொடுப்பனவு வழங்கவில்லை

வவுனியா, டிசெ.21

வவுனியாவில் பல விவசாயிகளுக்கு இதுவரை உரத்துக்கான கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வவுனியா மாவட்டத்தில் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற உரத்துக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாமையால் விவசாயிகள் தொடர்ந்தும் கடன் பெற வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெற் செய்கை ஆரம்பிக்கப்பட்ட கால பகுதியில் விவசாயிகளால் உரத்துக்கான பதிவுகள் அனைத்தும் கமக்கார அமைப்புகளின் ஊடாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

எனினும், வவுனியாவில் உள்ள பல விவசாயிகளுக்கு இதுவரை கொடுப்பனவு கிடைக்கப்பெறாத நிலைமை காணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் இம்முறை உரக் கொடுப்பனவாக ஹெக்டேயருக்கு 15, 000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக கொடுப்பனவை உயர்த்தியிருந்த போதிலும் கூட உரத்தை கொள்வனவு செய்வதற்கு விவசாயிகள் தொடர்ந்தும் கடன் பெற வேண்டிய இக்கட்டான சூழலில் காணப்படுவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர். (எ-10)

# ஆளுநருடன் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.21

புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை சந்தித்து, புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் கலந்துரையாடல் நடத்தினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், ஆளுநர் வேதநாயகன் முல்லைத்தீவு மாவட்டச் செயலராக கடந்த காலத்தில் பணியாற்றியமை தொடர்பில் நினைவுகூர்ந்தனர்.

மேலும், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக சங்க கட்டடத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்ததுடன், பிரதேசத்தின் வேறு பல தேவைகள் தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடினர்.

வர்த்தக சங்கத்தினரின் கோரிக்கைகளை சாதகமாக அணுகிய ஆளுநர், விரைவில் புதுக்குடியிருப்புக்கு வந்து அங்குள்ளவர்களை நேரில் சந்திப்பதாக குறிப்பிட்டார். (எ-05)

# வவுனியா இலுப்பைக்குளத்தில் மர நடுகை



வவுனியா, டிசெ.21

வவுனியா, இலுப்பைக்குளப்பகுதியில் நேற்றைய தினம் காலை 300 மரக்கன்றுகள் நடப்பட்டன.

இதனை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திர ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மர நடுகை திட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஸ்ரப், தலைமைப்பீட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ராஜேந்திரம், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சாந்தனா, விவசாயிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி சீர்திருத்தத்துக்கு அப்பால் விரிவான கல்வி மாற்றம் தேவை!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 21

**கல்விச் சீர்திருத்தங்களுக்கும் அப்பால் பரந்துபட்ட மாற்றமொன்றை மக்கள் கோருவதாகவும், பாடசாலைகளுக்கு இடையில் நிலவும் இடைவெளி இல்லாமலாக்கப்படுவதுடன், தனியார் பட்டப்படிப்பு நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் தேவை எனவும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**



கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களான, ஆசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவு ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு இடையிலான இடைவெளியை இல்லாமலாக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், அதை தமது தொழிலையும் தாண்டிய ஒரு தேசியப் பொறுப்பாகக் கருதி செயற்படுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட கல்விப் புரட்சிக்கு அப்பால் விரிவான கல்வி மாற்றமொன்று தேவைப்படுவதாகவும், அதனை நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

தேசிய கல்வி முகாமைத்துவ முறைமையின் அவசியத்தை சுட்டிக்காட்டிய பிரதமர், எதிர்கால சந்ததியினரை அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய நவீன தொழிநுட்ப உலகுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மோசடியான பட்டப் படிப்பு நிறுவனங்களிடமிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்தல், அதற்கான சட்டக் கட்டமைப்பு மற்றும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் தரம் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ, மீபே தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் கமல் பத்மசிறி, அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவின் மேலதிக செயலாளர் சந்திமா ஜானகி, தேசிய கல்வி ஆணைக் குழுவின் தலைவர் பத்மினி ரணவீர ஆகியோர் உட்பட அந்த நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# பாகிஸ்தானில் இருந்து சினை மாடு இறக்குமதி

கொழும்பு, டிசெ. 21

உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பாகிஸ்தானில் இருந்து சுக்கிலவிருத்தி சினை மாடுகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன் தினம் வியாழக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியதாவது,

உயரிய தரத்திலான மரபணு இயலுமைகளைக் கொண்டுள்ள பால் மாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக 2023 மற்றும் 2024 ஆகிய இரு ஆண்டுகளில் 100 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், குறித்த பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடிப்பதில் மேலெழுந்துள்ள பிரச்சினைகளால் தேவையான பால் மாடுகளை விநியோகிப்பதற்கு இது வரைக்கும்இயலாமல்போயுள்ளது.

அதனால் நேரடியாக இரண்டு அரசுகளுக்கிடையே மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களாகப் பொருத்தமான கறவை மாடுகளைக் கொள்வனவு செய்வதற்கான இயலுமை தொடர்பாக நாடுகள் சிலவற்றிலிருந்து தகவல்கள் கேட்டறியப்பட்டுள்ளதுடன், பாகிஸ்தான் தூதரகத்தின் இடையீட்டின் கீழ் பாகிஸ்தான் வணிக அபிவிருத்தி அதிகாரசபையால் சஹிவால் மற்றும் நிலிரவி வகைகளைச் சார்ந்த ஏழு சுக்கிலவிருத்தி கிடாரி சினை மாடுகளை எமது நாட்டுக்கு வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சுக்கிலவிருத்தி கிடாரி சினை மாடுகளை இறக்குமதி செய்து சுக்கிலங்களை விருத்தி செய்யும் வரைக்கும் சஹிவால் வகையைச் சார்ந்த 20,000 சுக்கில சினைகளை இந்தியாவின் தேசிய பால் அபிவிருத்திச் சபை மூலம், அரசுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களாகக் கொள்வனவு செய்வது பொருத்தமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# ‘கிளீன் சிறிலங்கா’ செயலணி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

“கிளீன் சிறிலங்கா“ வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் உட்பட 18 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியொன்றை அறிவித்து, வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதி செயலாளரினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என்.எஸ்.குமாநாயக்க, இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி உட்பட 18 பேர் குறித்த செயலணியில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (அ)

# அரசியல் பழிவாங்கலுக்காகவே மகிந்தவின் பாதுகாப்பு குறைப்பு

## மொட்டு கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 21

அரசியல் பழிவாங்கலுக்காகவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குரிய இராணுவ பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது என்று பொதுஜன பெரமுன கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டீ.வீ. சானக தெரிவித்துள்ளார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டை பாதுகாத்த, இந் நாட்டில் அதிக பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தலைவரான மகிந்த ராஜபக்ஷவின் இராணுவ பாதுகாப்பை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குழுவொன்றின் மீளாய்வின் பிரகாரமே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது என பொதுமக்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

நாட்டை பாதுகாத்த மகிந்த ராஜபக்ஷவுக்கு உள்ள அதே அளவிலான அச்சுறுத்தலா ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது? புலிகள் மற்றும் டயஸ் போராக்களால் மகிந்த ராஜபக்ஷவுக்கு உள்ள அதே அளவான அச்சுறுத்தலா மைத்திரிபால சிறிசேனவுக்கு உள்ளது? எனவே, அரசாங்கத் தின் பாதுகாப்பு மீளாய்வு தொடர்பில் எமக்கு நம்பிக்கை இல்லை. இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை.

ஜே.வி.பியின் ஒரு தரப்பை திருப்திபடுத்துவதற்காகவே இவ்வாறு மஹிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள் ளது. மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்கிய இராணுவத்தினர் முகாம்களுக்கு சென் றால் எப்படி செலவீனம் குறையும்? அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படதான் போகின்றது.

அரசியல் பழிவாங்கலுக்காக வேறு யாரை வேண்டுமானாலும் தெரிவு செய்துகொள்ளுங்கள். ஆனால் நாட்டை பாதுகாத்த தலைவரை அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்த வேண்டாம்-என்றார். (அ)

# இலங்கைக்கான நோர்வே தூதுவர் எதிர்க்கட்சி தலைவருடன் சந்திப்பு!

கொழும்பு, டிசெ. 21

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹி மே-எலின் ஸ்டெனீருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையில் நேற்று முன் தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது. இதன் போது இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பல சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில், நோர்வே தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)

# மியன்மார், உக்ரைனில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்க நடவடிக்கை!

கொழும்பு, டிசெ. 21

மியன்மார், உக்ரைன் போன்ற நாடுகளில் சிக்குண்டுள்ள இலங்கையர்களை மீட்டு, நாட்டுக்கு அழைத்து வர அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டுக்கு பொது மக்களின் உதவியை கோருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மியன்மார், யுக்ரைன் போன்ற நாடுகளில் பல இலங்கையர்கள் சிக்குண்டுள்ளார் என்ற தகவல் கிடைத்துள்ளது. இவர்களை நாட்டுக்கு மீண்டும் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொது மக்களும், இது தொடர்பான தகவல்களை எமக்கு தந்துதவ வேண்டும்-என்றார். (அ)

# மனைவியை கோடரியால் வெட்டிக் கொன்ற இலங்கையருக்கு ஆஸியில் 37 வருடச் சிறை!

மெல்பேர்ண், டிசெ. 21

பிள்ளைகளின் முன்னிலையில், தனது மனைவியை கோடரியால் வெட்டிக் கொன்ற இலங்கைப் பின்னணியுடைய கணவருக்கு ஆஸ்திரேலிய நீதிமன்றமொன்று 37 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இது ஒரு மிருகத்தனமான மற்றும் கொடூரமான தாக்குதல் என்று நீதிபதி விவரித்தார்.

விக்டோரியா மாநில உயர் நீதிமன்ற நீதிபதி அமண்டா [illegible] நேற்று முன் தினம் இந்த தீர்ப்பை வழங்கினார்.

47 வயதான தினுஷ் குரேராவுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பரோலுக்கு தகுதி பெறுவார்.

டிசெம்பர் 3, 2022 அன்று மெல்பேர்ன் வீட்டில் தனது மனைவி நெலோமி பெரேராவை கோடரியால் மற்றும் கத்தியால் பலமுறை குத்தியபோது, தான் தற்காப்புக்காக செயல்பட்டதாக குரேரா கூறினார்.

ஆனால் ஒரு நடுவர் மன்றம் அவரது கதையை நிராகரித்தது. ஒகஸ்ட் மாதம் மூன்று மணி நேர விவாதத்திற்குப் பிறகு அவரை கொலைக் குற்றவாளி என அறிவித்தது.

குரேராவின் குழந்தைகள் தாக்குதலைக் கண்டுள்ளனர். அவரது 16 வயது மகள் கத்தியைப் பிடித்தபடி அவரைத் தடுக்க முயன்றார்.

இரண்டு குழந்தைகளும் விசாரணையில் சாட்சியங்களை அளித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி!

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயத்தின்மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வலுவடைந்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பினபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்திய விஜயத்தின்போது அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் முதல் நாளில் பேச்சுகளை நடத்தினோம். இச்சந்திப்புகளின்மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகள் மேலும் வலுவடைந்தன.

அத்துடன், இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான உறவில் புதிய அத்தியாயமும் ஆரம்பமாகியுள்ளது. இது எமது நாட்டு மக்களுக்கு கிடைக்கப் பெற்ற வெற்றியாகும்.

இந்திய பிரதமருடனும் இரு தரப்பு பேச்சுகள் இடம்பெற்றன. கூட்டறிக்கையொன்றும் வெளியிடப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. இந்திய ஜனாதிபதியையும் சந்தித்து கலந்துரையாடி இருந்தோம். மூன்றாம் நாள் புத்தகயாவுக்கு சென்றிருந்தோம்.

எமது நாட்டை சேர்ந்த 1,500 அரசாங்க ஊழியர்களுக்கு, அரசாங்க துறை தொடர்பில் இந்தியாவில் பயிற்சி திட்டம் மற்றும் இரு தரப்பு வரி விலக்கம் ஆகிய இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மட்டுமே கைச்சாத்திடப்பட்டன. வேறு விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடுக்கு வரவில்லை. அவை தொடர்பில் பேச்சுகள் நடத்தப்படும்.

ஒரு அரசாங்க ஊழியருக்கு இரு வாரங்கள் என்ற அடிப்படையில், ஐந்து வருட காலப் பகுதிக்குள் இப்பயிற்சித் திட்டம் இடம்பெறும்--என்றார். (அ)

## ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் முன்னாள் ஜானாதிபதி ரணில் விளக்கம்

கொழும்பு, டிசெ. 21

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் வழங்கப்பட்ட விதம் குறித்து விளக்கமளித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள், அனைத்து விண்ணப்பங்களுக்கும் பணம் செலுத்தப்பட்டதாகவும், அதற்காக 1515 மில்லியன் ரூபாவும், 2023 இல் 839 மில்லியன் ரூபாவும், 2024 செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் நோயாளர்களுக்கான மருத்துவ உதவியாக சுமார் 450 மில்லியன் ரூபாவும் செலுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பிரதிநிதிகள் தனிப்பட்ட ரீதியில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்த போதிலும், ஒரு கோரிக்கையை தவிர ஏனைய அனைத்து கோரிக்கைகளுக்கும் ஜனாதிபதி நிதியத்தின் பொது நடைமுறைகளை பின்பற்றி 10 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான நிதியுதவி வழங்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி வரை ஜனாதிபதி நிதியத்தில் வைக்கப்பட்டிருந்த 7,000 மில்லியன் ரூபாவை பணத்திற்காக, பல்வேறு கொடுப்பனவுகள் இருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை 11,000 மில்லியன் ரூபாவைத் தாண்டிய மீதியை பேணுவதற்கு தாம் நடவடிக்கை எடுத்ததாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த 11 மாதங்களில் தனது பாதுகாப்புச் செலவுகளுக்காக 82 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கை கடல் எல்லைக்குள் கப்பல்களை அனுமதிக்கத் தேசிய கொள்கை விரைவில்!

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 21

இலங்கை கடல் எல்லைக்குள் வரும் கப்பல்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்கு தேசிய கொள்கை உருவாக்கப்படும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் குறித்து தெளிவூட்டும் வகையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் எந்தவொரு வெளிநாட்டுக் கப்பலுக்கும் உள்நுழைய நாம் அனுமதிக்கமாட்டோம்.

ஆய்வுக் கப்பல்கள் உள்ளிட்ட ஏனையவை இலங்கை கடல் எல்லைக்குள் நுழைய அனுமதியளிப்பது குறித்து தீர்மானம் எடுப்பதற்காக தேசிய கொள்கை உருவாக்கப்படும்.

அதற்கென தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும் விசேட குழுவொன்றை நியமிப்பதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம்.

அந்தக் குழுவானது இலங்கைக்குள் வெளிநாட்டுக் கப்பல் வருகை தருவதற்கான அடிப்படை விதிமுறைகள் உள்ளிட்டவற்றை தயாரிக்கும். அதன் பிரகாரமே கப்பல்களுக்கான அனுமதி வழங்கப்படும்-என்றார். (அ)

## தற்பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீள ஒப்படைக்குக!

### பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 21

தற்பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள அனைத்து வகையான துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை ஆய்வுக்குட்படுத்தும் பொருட்டு தற்காலிகமாக மீள வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு வழங்க தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது-தற்பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டுள்ள அனைத்து வகையான துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை 2024 நவம்பர் 21க்கு முன்னர் மதிப்பாய்வுக்காக அரசாங்கத்திடம் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கு ஊடாக ஏற்கனவே அறிவித்துள்ளது.

இவ்வறிவிப்புக்கு அமைய, அனுமதிப் பத்திரம் பெற்றவர்களில் 85 விதமானோர் துப்பாக்கிகளை திருப்பி ஒப்படைத்துள்ளனர்.

மேலும், அவர்கள் தொடர்ந்தும் துப்பாக்கிகளை வைத்திருக்க விரும்பினால், அதன் அவசியத்தை விளக்கி 2024 ஒக்ரோபர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சிடம் முறையீடுகளை சமர்ப்பிக்கவும் அவர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

அந்த முறையீடுகளைச் சமர்ப்பித்த உரிமதாரர்களின் துப்பாக்கிகளை ஆய்வு செய்வதற்கும் மறுபரிசீலனை செய்வதற்கும் துப்பாக்கிகள் மற்றும் அவற்றின் ஆவணங்களை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. தற்பாதுகாப்புக்காக ஒருவருக்கு ஒரு துப்பாக்கி மட்டுமே வழங்கப்படும் என்பது பாதுகாப்பு அமைச்சின் முடிவாகும்.

மேலும் அது புலனாய்வுத்துறை அறிக்கைகளுக்கமைய மேற்கொள்ளப்படும். துப்பாக்கிகள் தொடர்பான அனைத்து முறையீடுகள் மற்றும் துப்பாக்கி தொடர்பான ஆய்வுகள் 2025 ஜனவரி 20 அன்று முடிவடையும் என்றும், அந்தத் திகதிக்கு முன் துப்பாக்கிகளை ஆய்வுக்காக சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# மியன்மார் அகதிகள் விவகாரம் முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 21

மியன்மாரில் இருந்து 103 பயணிகளுடன் திசை மாறி வந்த கப்பலொன்று நேற்று முன் தினம் முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் கரையொதுங்கியிருந்த நிலையில், குறித்த படகில் இருந்தவர்களை மீட்கும் நடவடிக்கை இலங்கை அரசினால் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை திருகோணமலை துறைமுக அதிகார சபை இறங்குதுறைக்கு, குறித்த படகு இலங்கை கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டதாகவும், அதன் பின்னர் அப்படகில் இருந்தவர்களுக்கு உணவு மற்றும் குடிதண்ணீர் என்பன வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மருத்துவப் பரிசோதனைகளுக்காக அப்படகில் கூறப்பட்டது.

இதன்போது குறித்த கப்பலில் 25 மேற்பட்ட சிறுவர்கள் இருந்துள்ளனர் எனவும் அவர்களில் சிலர் மயக்கமடைந்த நிலையிலும் சுகவீன முற்ற நிலையிலும் இருந்துள்ளனர் எனவும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

விசாரணையில் உள்நாட்டு யுத்தம் காரணமாக 110 நபர்கள் மூன்று படகுகளில் தமது நாட்டிலிருந்து புறப்பட்ட தாகவும் அதன்போது கடலில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக இரு படகுகள் விபத்திற்குள்ளானதாகவும் குறித்த அனர்த்தத்தில் சிறுவர்கள் உட்பட 6 நபர்கள் மரணமடைந்துள்ளதாகவும், எஞ்சிய அனைவரும் குறித்த படகில் ஏறி உயிர் தப்பியதாகவும் தெரிய வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ)

## அரிசி ஆலை உரிமையாளர்கள் தன்னிச்சையான செயற்பாடு!

### நிறுத்த கோருகிறார் பத்தரமுல்ல சீலரத்ன தேரர்

கொழும்பு, டிசெ. 21

அரிசி ஆலை உரிமையாளர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளை அரசாங்கம் நிறைவுக்குக் கொண்டுவர வேண்டும் என ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரிசிக்கும் உப்புக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக ஊடகங்களின் ஊடாக அறிந்தேன். அவற்றை பெற்றுக்கொள்வதற்காக ஆலைக்குச் சென்ற போது ஒரு கிலோ கிராம் அரிசியும் உப்பு சிறிய பைக்கற்று ஒன்றுமே பெறக் கூடியதாக இருந்தது.

மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை தடையின்றி பெற்றுக்கொடுப்பதற்கான கடமை அரசாங்கத்துக்கு உண்டு. ஆயினும் இங்கே அரிசி, உப்பு விநியோகத்தில் ஏகாதிபத்தியம் நிலவுகிறது. இல்லாவிட்டால் நாடு மேலும் பாதிப்பை எதிர்நோக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் உள்ள இலங்கையர் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு வசதி

## பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா

கொழும்பு, டிசெ. 21

**வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார். இது மக்களின் அரசாங்கம் ஆகவே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவோம் என வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.**

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகாரத்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் புலம்பெயர்ந்தோர் அதேபோல் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி வாழ்பவர்களின் உரிமைகளுக்காகவே சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் போது புலம்பெயர்ந்தோர் அந்நிய செலாவணி ஊடாக இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்காமல் இருந்திருந்தால் நெருக்கடி மேலும் தீவிரமடைந்திருக்கும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கடன்மறுசீரமைப்பு பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப்பெறும் 3 பில்லியன் டொலர்களை காட்டிலும் புலம்பெயர்ந்து வாழும், தொழில் புரியும் எமது உறவுகளிடமிருந்து அதிகளவான அந்நிய செலாவணி கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் குடும்ப பண அனுப்பல்களின் பெறுமதி 4.48 பில்லியன் டொலர்களாக காணப்படுகிறது.

மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் கடந்த நவம்பர் மாதம் சற்று பின்னடைவு காணப்பட்டாலும், ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் குடும்ப பண அனுப்பலின் பெறுமதி 5,961.6 பில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் இவர்களை மதிக்க வேண்டும். அவர்களின் உழைப்புக்கு உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும்.

வாகன இறக்குமதியின் போது வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கு விசேட சலுகை வழங்கப்படும் என்று கடந்த அரசாங்கம் குறிப்பிட்டது. இருப்பினும் இதனூடாகவும் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்ட ரீதியான முறையில் தென்கொரியாவுக்கு இலங்கையர்களை அனுப்புவதற்கு பதிலாக இ - 8 முறைமை ஊடாக அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதனால் பல சிக்கல்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்விவகாரம் குறித்து குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியுள்ளார். இது மக்களின் அரசாங்கம் ஆகவே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவோம்-என்றார்.

(அ)

# விமானத்தில் பெண்ணிடம் அநாகரிகமாக நடந்துகொண்ட இலங்கையர் மீது வழக்கு!

கொழும்பு, டிசெ. 21

விமானத்தில் பெண் பயணியிடம் தகாத முறையில் நடந்து கொண்ட குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த நபர் மெல்பேர்ன் நகரின் ப்ரோமேடோஸ் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து கடந்த புதன்கிழமை மெல்பேர்னுக்கு பயணமான விமானத்தில் 41 வயதான ஆண் ஒருவர் பெண் பயணியிடம் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டிருக்கிறார். அதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் குறித்த பெண் விமான சேவை ஊழியர்களுக்கு அறியப்படுத்தியதுடன், அவர்கள் ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸில் முறைப்பாடளித்தனர். அதன்படி குறித்த விமானம் மெல்பேர்னில் தரையிறங்கியவுடன் ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸார் இச்சம்பவம் பற்றி பயணிகளிடமும், விமான சேவை ஊழியர்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் 1991 ஆம் ஆண்டு குற்றங்கள் (விமானசேவை) சட்டத்தின் 15(1) சரத்தின் பிரகாரம் அநாகரிகமான முறையில் நடந்துகொண்ட குற்றத்துக்காக குறித்த நபருக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் மெல்பேர்ன் நகரின் ப்ரோமேடோஸ் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்படி நபர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், எதிர்வரும் 2025 ஜனவரி 9 ஆம் திகதி மீண்டும் மன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(அ)

# வீட்டைத் தாக்கிய சம்பவம் 5 கலால் அதிகாரிகள் கைது

கொழும்பு, டிசெ. 21

கொத்தடுவ பிரதேசத்தில் போதைப்பொருள் சோதனைக்கு சென்று வீட்டு உரிமையாளர்களை தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் 05 கலால் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவிக்கையில்- கடந்த மாதம் 11 ஆம் திகதி இரவு 10 மணியளவில் கலால் திணைக்கள அதிகாரிகள் வீட்டுக்குள் பலவந்தமாக நுழைந்து சோதனையிட்டதாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றது.

அப்போது வீட்டில் இருந்த பெண் தன்னையும் இரண்டு குழந்தைகளையும் அதிகாரிகள் தாக்கியதாகவும், அப்போது தனது ஆடைகள் கிழிந்ததாகவும் பொலிஸில் புகார் அளித்தார்.

இதனை தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.-என்றார்.

(அ)

# இலங்கை குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது குறித்து முடிவில்லை!

கொழும்பு, டிசெ. 21

குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில் தற்போதைய அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

" குரங்கு உள்ளிட்ட விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான யோசனைகள் நீண்டகால திட்டங்களாகும்.

அவற்றை நடைமுறைப்படுத்தும் வரை விவசாயிகளுக்கும், மக்களுக்கும் காத்திருக்க முடியாது. எனவே குறுகிய கால திட்டங்கள் தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

குரங்குகள் போன்ற மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விலங்குகளை நாட்டின் வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லல் மற்றும் இனப்பெருக்க கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மாறாக குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது குறித்து கலந்துரையாடப்படவில்லை." எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# இந்திய எண்ணெய் குழாய் அமைப்பு எந்தவொரு இணக்கப்பாடும் இல்லை

கொழும்பு, டிசெ. 21

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயத்தின் போது, இலங்கையில் இந்திய எண்ணெய் குழாய்களை அமைப்பது தொடர்பில் எந்தவொரு இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் அறிவிப்பதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியா மற்றும் இலங்கை மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு இடையில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள எண்ணெய்க் குழாய் நிர்மாணப் பணிகள் குறித்து அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

அதை விடுத்து இலங்கையில் எண்ணெய் குழாய் அமைக்க இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதாக செய்திகளை உருவாக்குவது உண்மைக்கு புறம்பானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(அ)

# சர்வதேச ஆய்வுக் கப்பல்களுக்கு அனுமதியளிக்க தேசிய கொள்கை

## விசேட குழுவை நியமிக்கும் அரசு

கொழும்பு, டிசெ. 21

இலங்கைக்கு வருகைதரும் சர்வதேச கப்பல்களுக்கு அனுமதியளிக்கும் தேசிய கொள்கையொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், குறித்த கொள்கையை வகுக்க விசேட குழுவொன்றை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியதாவது-

இலங்கைக்கு வருகைதரும் ஆய்வு கப்பல்கள் தொடர்பில் தெளிவாக எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளோம். இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தாகும் வகையிலான எந்தவொரு அனுமதியும் வழங்கப்படாது. ஆய்வு கப்பல்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்று அவசியமாகும். தேசிய கொள்கையை வகுக்க விசேட குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆய்வு கப்பல்கள் மாத்திரம் அல்ல இலங்கைக்கு வருகை தரும் அனைத்து கப்பல்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்ன என்பது தொடர்பில் ஆய்வுகளை நடத்தி சிபாரிசுகளை முன்வைக்கும் பொறுப்பு இந்த குழுவுக்கு வழங்கப்படும். அதன் பிரகாரம் தான் எதிர்காலத்தில் நாம் செயல்படுவோம்.

இந்தியா அதன் கடல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கரிசனை கொண்டுள்ளது. நாமும் அதனை உறுதியளித்துள்ளோம். இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் எந்தவொரு தீர்மானத்தை இலங்கை எடுக்காது என்றும் உறுதியளித்துள்ளோம்.

டிசம்பர் 31 விதிக்கப்பட்டுள்ள தடை தொடரும். குறித்த குழுதான் இது தொடர்பில் முடிவெடுக்கப்படும். சீன ஆய்வு கப்பல்கள் மாத்திரம் அல்ல அனைத்து கப்பல்களினதும் வருகையை அனுமதியளிக்கும் தேசிய கொள்கையே வகுக்கப்படும்-என்றார். (அ)

# கருணா சி.ஐ.டியில் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ. 21

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடந்த 2006ஆம் ஆண்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவில் கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கொழும்பில் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு மட்டக்களப்பு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தபோது இனம் தெரியாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக சி.ஐ.டியினர் விசாரணை மேற்கொண்டுவரும் நிலையில் கருணா அம்மானை சி.ஐ.டியினர் விசாரணைக்கு அழைத்ததையிட்டு அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பிலுள்ள சி.ஐ.டிக்கு சென்று வாக்குமூலம் வழங்கினார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கருணா அம்மான், தன்னிடம் உபவேந்தர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் தொடர்பாக வாக்கு மூலம் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை துறைமுகத்தில் மியன்மார் அகதிகள் படகு

திருகோணமலை, டிசெ.21

**முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் 103 ரோஹிங்கியா அகதிகளுடன் கரை ஒதுங்கிய மியன்மார் படகு நேற்றுக் காலை திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்தை சென்றடைந்தது.**



இந்த நிலையில், குறித்த படகில் வந்தவர்கள் திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் நாமகள் வித்தியாலயத்தில் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கான உணவு உட்பட ஏனைய வசதிகளை திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச செயலகம் முன்னெடுத்து வருவதோடு ஏனைய அரச திணைக்களங்களும் தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் 35 சிறுவர்கள் உட்பட 103 அகதிகளுடன் படகொன்று நேற்று முன்தினம் கரையொதுங்கியிருந்தது. இந்த படகே நேற்றுக்காலை திருகோணமலைக்கு கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டது. (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் நிந்தவூரில் ஒருவர் கைது

நிந்தவூர், டிசெ.21

ஐஸ் போதைப்பொருளுடன் மல்வத்தை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவில் உள்ள புறநகர் பகுதி ஒன்றில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய 34 வயது மதிக்கத்தக்க நபரை சோதனை செய்த விசேட அதிரடிப் படையினர் 2 மில்லி 450 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டனர்.

இதன்போது நீண்ட காலமாக குறித்த நபர் இப்பகுதியில் போதைப்பொருளை விற்று வந்துள்ளதுடன் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

# நிலாவெளியில் விவசாயிகளுக்கு இலவசமாக பசளை விநியோகம்

திருகோணமலை, டிசெ.21

திருகோணமலை மாவட்ட நிலாவெளி கமநல சேவை பகுதிக்குட்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக எம். ஓ. பி. பசளை விநியோகிக்கப்பட்டது.

நிலாவெளி கமநல சேவை நிலையத்தில் வைத்து பசளை விநியோகிக்கப்பட்டது.

3417 ஏக்கர் பெரும்போக நெற் செய்கைக்காக இந்த பசளை வழங்கப்பட்டது. மேலும் சிறு நீர்ப்பாசனம், பெரிய நீர்ப்பாசனத்துக்கு ஒரு ஏக்கருக்கு 12 கிலோவும் மானாவாரிக்கு ஒரு ஏக்கருக்கு 10 கிலோவும் வழங்கி வைக்கப்பட்டன.

12 கமக்கார அமைப்புகளை சேர்ந்த விவசாயிகளுக்கு இவ்வாறு இலவசமாக பசளை விநியோகிக்கப்பட்டன. (எ)

# கிண்ணியாவில் பல ஏக்கர் வேளாண்மை பாதிப்பு

கிண்ணியா, டிசெ.21

அண்மையில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக திருகோணமலை, கிண்ணியாவில் பல ஏக்கர் வேளாண்மை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் விவசாயிகள் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சோலை வெட்டுவான், மயிலப்பஞ்சேனை, கண்டக்காடு முதலான பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை மழை வெள்ளம் காரணமாக நீரில் மூழ்கி அழிந்து விட்டதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் சுமார் 200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கு செய்கை பண்ணப்பட்ட வேளாண்மைகளை விட புல் அதிகமாக காணப்படுவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

விவசாயத்தை நம்பி வாழும் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதோடு அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தி இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)



# போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் ஊடக அடிப்படையிலான செயலமர்வு

சம்மாந்துறை, டிசெ.21

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் ஊடக அடிப்படையிலான போதைப்பொருள் தடுப்பு செயலமர்வு சம்மாந்துறை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம். எம். ஜி. பி. எம். ரஷாத் ஒருங்கிணைப்பில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் ஊடகத்துறை சார்ந்த நிபுணர்களின் நுண்ணறிவு விளக்கங்கள் இந்த செயலமர்வில் இடம்பெற்றதுடன் விவாதங்கள் மற்றும் கேள்வி பதில் அமர்வுகளும் நடைபெற்றன.



போதைப் பொருள் பாவனை மற்றும் அதன் அழிவுகரமான விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தச் செயலமர்வில் ஊடகவியலாளர்களின் பங்கேற்பானது போதைப் பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கான எங்களின் கூட்டு முயற்சிகளுக்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் இணைப்பாளர் ரஷாத் தெரிவித்தார்.

இதில் சம்மாந்துறை பொலிஸ் நிலையபதில் பொறுப்பதிகாரி நௌபர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ராசிக் நபாயிஸ், ஏ.ஜெ.எம். இக்ராம், ஊடகவியலாளர்கள், சமூக ஊடகச் செயல்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# ஹெரோயின் வைத்திருந்த குடும்பஸ்தர் இருவர் கைது

திருகோணமலை, டிசெ.21

திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பஸ்தர் இருவர் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் இவர்களை கைது செய்துள்ளனர்.

குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சலப்பை ஆறு, சுனாமி வீட்டுத்திட்டப் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் அவரிடமிருந்து 1. 530 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் வழங்கிய தகவலை அடுத்து, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி, இரக்ககண்டி பகுதியில் 5.190 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மற்றைவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைக்காக குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை விரைவாக நிரப்புங்கள்

## தொழிற்சங்கம் கோரிக்கை

கல்முனை, டிசெ.21

கிழக்கு மாகாண சபையில் நிலவும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை விரைவாக நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ. ஜி. முபாரக், கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், சுமார் 350 வெற்றிடங்கள் நிலவுவதாக சுட்டிக்காட்டியுள்ளார். மத்திய அரசு கடந்த மாதம் பரீட்சை நடத்தி பெறுபேறுகளை வெளியிட்டுள்ளமையும் இதற்கு முன்பு ஒரு தடவை ஆட்கள் சேர்க்கப்பட்டுள்ளதையும், வேறு மாகாணங்களிலும் ஆட்கள் சேர்க்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி கிழக்கில் ஆட்கள் சேர்க்கப்படாததையும் குறிப்பிட்டுள்ளார். மேலும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடம் நிரப்பப்படாததால் சேவையில் உள்ளவர்கள் இட மாற்றம் பெறுவதற்கு தடங்கலாக உள்ளதையும் வேலைப் பழு அதிகரித்திருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# தாமரைக்குளம் துப்புரவு

சாய்ந்தமருது, டிசெ.21

சாய்ந்தமருது மருத்துவமனையின் அருகிலுள்ள தாமரைக் குளத்தை துப்புரவு செய்யும் பணி நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக் குளத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா உள்ளிட்ட குழுவினர் வியாழக்கிழமை சென்று பார்வையிட்டனர்.

குளத்தின் ஆழமான பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை அகற்றி தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யுமாறும் பணிப்புரை விடுத்திருந்தார்.

அவரின் பணிப்புரைக்கு அமைய நேற்று வெள்ளிக்கிழமை தாமரை குளத்தை துப்புரவு செய்யும் பணிகள், கல்முனை மாநகர சபை ஊழியர்களால் (திண்மக் கழிவுகளை அகற்றும் பணிகள்) மேற்கொள்ளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைகள் இன்றி உக்ரைனுடன் சமரசம்

## ரஷ்ய ஜனாதிபதி புடின் திடீர் அறிவிப்பு

மொஸ்கோ, டிசெ. 21

**உக்ரைன் அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்த எந்த வித நிபந்தனையும் இல்லை என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.**



நேட்டோ அமைப்பில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்கள் வழங்கின. பொருளாதார உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகின்றன. அதேபோன்று, ரஷ்யாவுக்கு அதன் நட்பு நாடுகளான சீனா, வடகொரியா போன்றவை ஆதரவாக செயல்படுகின்றன.

தற்போது உக்ரைனுக்குள் நுழைந்து ரஷ்யா படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. அதேபோன்று உக்ரைனும், ரஷ்யா படைகளுக்கு தக்க பதிலடி கொடுத்து வருகின்றன. இந்தச் சூழலில் இந்த போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா உட்பட பலநாடுகள் முயன்றன. ஆனால், ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் இன்று வரை முடிவுக்கு வரவில்லை. கடந்த ஒரு மாதமாக மீண்டும் மோதல் வலுத்துள்ளது.

இதற்கு முக்கிய காரணம் அமெரிக்கா, இங்கிலாந்து தயாரிப்பு ஏவுகணைகளை பயன்படுத்தி உக்ரைன், ரஷ்யா மீது தாக்குதல் நடத்தியதே. இதனால், கோபமான ரஷ்யா, உக்ரைன் மீதும் ஏவுகணை தாக்குதலை தொடங்கியது.

இந்த நிலையில், உக்ரைன் விவகாரத்தில் சமரசம் செய்து கொள்ளத் தயார் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார். இதன்படி, அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்புடன் போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து பேச்சுகள் நடத்தவும், உக்ரைன் விவகாரத்தில் சமரசம் செய்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும், உக்ரைன் அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்த எந்த நிபந்தனையும் இல்லை என்றும் புடின் கூறியதாக அந்த நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. (எ)

# மொசாம்பிக்கை தாக்கிய புயலால் 73 பேர் உயிரிழப்பு



மபுடோ, டிசெ.21

மொசாம்பிக் நாட்டை தாக்கிய புயலில் சிக்கி இதுவரை 73 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு மொசாம்பிக். இதனை சிடோ என்ற புயல் தாக்கியது.

இந்தப் புயல் காரணமாக ஒரேநாளில் 250 மில்லிமீற்றர் மழை கொட்டித்தீர்த்தது.

புயலால் 39 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன. மேலும் புயல், மழையால் 3 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மொசாம்பிக் நாட்டை தாக்கிய சிடோ புயலில் சிக்கி இதுவரை 73 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. குறிப்பாக கபா டெல்கொடா மாகாணத்தில் மட்டும் 66 பேர் உயிரிழந்தனர். புயலால் 500இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். புயல் கரையை கடந்துள்ள நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (எ)

# 84 உக்ரைன் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது ரஷ்யா

மொஸ்கோ, டிசெ.21

ரஷ்யாவின் எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்த முயன்ற உக்ரைன் நாட்டின் 84 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், " ரஷ்யாவின் எல்லைக்குள் ட்ரோன்கள் மூலம் பயங்கரவாத தாக்குதல் நடத்துவதற்கான உக்ரைனின் முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. ரஷ்யாவின் வான் பாது காப்பு அமைப்புகள் மூலம், எல்லை தாண்டி வந்த 84 உக் ரைன் ட்ரோன்கள் சுட்டு வீழ்த் தப்பட்டன. இதில் 36 ட்ரோன் கள் ராஸ்டோவ் பகுதியிலும், 21 ட்ரோன்கள் பிரையன்ஸ்க் பகுதியிலும், 14 ட்ரோன்கள் பெல்கோராட் பகுதியிலும், 6 ட்ரோன்கள் வோரோனெக் பகுதியிலும், தலா 3 ட்ரோன் கள் குர்ஸ்க் மற்றும் தம்போவ் பகுதிகளிலும், ஒரு ட்ரோன் கிராஸ்னோடார் பகுதியிலும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# கிரீஸ் கடற்பகுதியில் படகு கவிழ்ந்து விபத்து

## 5 பாகிஸ்தானியர்கள் பலி, 35 பேர் மாயம்

இஸ்லாமாபாத், டிசெ.21

புலம்பெயர்ந்த மக்களை ஏற்றிக்கொண்டு கிரீஸ் நோக்கி சென்று கொண்டிருந்த ஒரு படகு, அந்த நாட்டின் காவ்டோஸ் தீவின் அருகே சென்றபோது திடீரென கவிழ்ந்தது. படகு ஒருபக்கமாக சாய்ந்து மூழ்கத் தொடங்கியதும் படகில் இருந்தவர்கள் கடலில் குதித்து உயிர்தப்பிக்க போராடினர். இதுபற்றி தகவல் அறிந்த கிரீஸ் நாட்டின் மீட்புக் குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 150 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். மேலும் 35 பேரைக் காணவில்லை. அவர்களை தேடும் பணி நடைபெற்றது. அதன்பின்னர் மீட்பு பணி நிறுத்தப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது. காணாமல் போன 35 பேரும் உயிரிழந்திருக்கலாம் என கருதப்படுகிறது. இவர்கள் அனைவரும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த 5 பேர் கிரீஸ் படகு விபத்தில் உயிரிழந்ததாக பாகிஸ்தான் அதிகாரிகள் உறுதி செய்தனர். (எ)

# "ராகுல் காந்திமீது பா.ஜ.க. வழக்கு பதிவு போராட்டத்தை திசை திருப்பும் முயற்சி"

புதுடில்லி, டிசெ.21

இந்திய மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீது வழக்கு பதிவு செய்திருப்பது, உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் அம்பேத்கர் குறித்த பேச்சுக்கு எதிரான அவரின் போராட்டத்தை திசை திருப்பும் பா. ஜ. கவின் தந்திரம் என்று காங்கிரஸ் கட்சி விமர்சித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் கே. சி. வேணுகோபல் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், " பாபாசாகேப்பின் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக வழக்குப் பதிவை சந்திப்பது பெருமைக்குரிய விடயமே. எவ்வாறாயினும், பாரதிய ஜனதா கட்சியின் அரசியல் பழிவாங்கல் காரணமாக ராகுல் காந்தி ஏற்கனவே 26 வழக்குகளை சந்தித்து வருகிறார். சமீபத்திய இந்த வழக்கும், சாதி



வெறி ஆர். எஸ். எஸ். - பா. ஜ. க. ஆட்சிக்கு எதிராக ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் நிற்பதை தடுத்து நிறுத்த முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஆப்கானில் இடம்பெற்ற விபத்துகளில் 50 பேர் பலி

காபுல், டிசெ.21

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற வெவ்வேறு நெடுஞ்சாலை விபத்துகளில் சிக்கி 50 பேர் உயிரிழந்தனர். 76 பேர் படுகாயமடைந்தனர்.

காபுல் - கந்தஹார் நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்தும் எண்ணெய் ஏற்றி சென்ற பௌசரும் மோதி விபத்துக்குள்ளானது. மற்றொரு சம்பவம் அதே நெடுஞ்சாலையில் ஆப்கானிஸ்தான் தலைநகரை இணைக்கும் பகுதியில் நடந்தது. இந்த இரண்டு விபத்துகளில் மொத்தம் 50 பேர் உயிரிழந்தனர் மற்றும் 76 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கஸ்னியில் உள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதில் மிகவும் மோசமான நிலையில் உள்ள நோயாளிகள் காபுலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (எ)

# எரிபொருள் நிரப்பு நிலையம் தீக்கிரை

ஜெய்ப்பூர்,டிசெ.21

இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் பெற்றோல் நிரம்பும் நிலையம் அருகில் நின்றிருந்த இரசாயனம் ஏற்றிவந்த வாகனத்தின் மீது லொறி ஒன்று மோதியதில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில்ஐவர்பலியாகினர்.

விபத்து குறித்து பொலிஸார் கூறுகையில், "ஜெய்ப்பூர் - அஜ்மீர் நெடுஞ்சாலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றின் அருகில் நிறுத்திவைக் கப்பட்டிருந்த எல். பி. ஜி. பௌசர் மீது லொறி ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது. இதனால், இரசாயனம் ஏற்றி வந்த வாகனம் திடீரென தீ பிடித்தது. இதனையடுத்து லொறியும் தீப்பிடித்து, பெற்றோல் நிரப்பு நிலையமும் தீப்பிடித்ததால் பெரும் தீ விபத்தாக மாறியது.

இதில் ஐவர் பலியாகினர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# பயங்கர தீ விபத்தில் சிக்கி தாய்வானில் 9 பேர் மரணம்

தைபே, டிசெ.21

தாய்வானில் கட்டுமான பணியிடத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கிய 9 பேர் உயிரிழந்தனர்.தாய்வானின் மத்திய பகுதியில் உள்ளது தாய்சங் நகரில் உணவு பதப்படுத்தும் பிரிவுக் கான புதிய கட்டடம் நிர்மா ணிக்கப்பட்டு வருகிறது. 5 தளங்கள் கொண்ட இந்தக் கட்டடத்தின் ஒரு பகுதியில் நேற்று தீ பற்றியது. பின்னர் மளமளவென வேகமாக பரவிய தீ கொளுந்துவிட்டு எரிந்தது. இதனால் அந்தக் கட்டடத்தில் வேலை செய்துகொண்டிருந்த வர்கள் அலறியடித்து வெளி யேறினர். சிலர் வெளியேற முடியாமல் சிக்கிக்கொண்டனர்.இந்த விபத்தில் 9 பேர் உயி ரிழந்தனர். விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் வசமானது ரி - 20 தொடர் மே. இ. தீவுகள் மிக மோசமான தோல்வி



ஜமைக்கா, டிசெ.21

3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 3 - 0 என பங்களாதேஷ் அணி முழுமையாக கைப்பற்றியது. மேற்கு இந்திய தீவுகள் அணி சொந்த மண்ணில் மிக மோசமான தோல்வியைத் தழுவியுள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடர் 1 - 1 என சமனில் முடிந்தது. ஒருநாள் தொடரை 3 - 0 என்ற கணக்கில் மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது.

இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் நடைபெற்றது. இதில் முதல் இரு ஆட்டங்களில் பங்களாதேஷ் வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி நடைபெற்றது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது. அந்த அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழந்து 189 ஓட்டங்கள் எடுத்தது. பங்களாதேஷ் தரப்பில் அதிகபட்சமாக ஜாக்கர் அலி 72 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் சார்பில் ரொமாரியோ ஷெப்பர்ட் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி, பங்களாதேஷின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது. இறுதியில் மேற்கு இந்திய தீவுகள் அணி 16. 4 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 109 ஓட்டங்கள் மட்டுமே பெற்றது. இதன் மூலம் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக ரொமாரியோ ஷெப்பர்ட் 33 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் தரப்பில் ரிஷாத் ஹொசைன் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 3-0 என பங்களாதேஷ் முழுமையாக கைப்பற்றியது.

(எ)

# இந்தியா இலகு வெற்றி

கோலாலம்பூர், டிசெ.21

பங்களாதேஷுக்கு எதிரான ரி - 20 போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது.

முதலாவது மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி (19 வயதுக்குட்பட்டோர்) மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 6 அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதின. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடித்த அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறின.

இதன்படி இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறின. இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழந்து 80 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இந்தியா தரப்பில் ஆயுஷி சுக்லா 3 விக்கெட்கள், சோனம் யாதவ் 2 விக்கெட்கள் கைப்பற்றினர்.

அடுத்து களமிறங்கிய இந்திய அணி12. 1 ஓவர்களில் 2 விக்கெட்கள் மட்டும் இழந்து 86 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

(எ)

# சம்பியனானது ரியல் மட்ரிட்



கட்டார், டிசெ.21


இன்டர்கான்டினென்டல் உதைபந்தாட்ட போட்டியில் ரியல் மட்ரிட் அணி சம்பியனானது.

பிபா இன்டர்கான்டினென்டல் உதைபந்தாட்ட தொடர் கட்டாரில் நடைபெற்றது. இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரியல் மட்ரிட், மெக் சிக்கோவின் பச்சுகா அணிகள் மோதின.

இதில் ரியல் மட்ரிட் அணி 3 - 0 என்ற கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. (எ)

பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடர்

# ஆஸி அணியிலிருந்து மெக்ஸ்வீனி நீக்கம்!



மெல்பேர்ண், டிசெ.21

பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின்கடைசி இரு ஆட்டங்களுக்கான அவுஸ்திரேலிய அணியில் இருந்து தொடக்க ஆட்டக்காரர் நாதன் மெக்ஸ்வீனி நீக்கப்பட்டுள்ளார்.

ரோஹித் சர்மா தலைமை யிலான இந்திய கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 3 ஆட்டங்கள் முடிந்துள்ள நிலையில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளன. ஒரு ஆட்டம் சமனில் முடிந்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது போட்டி வரும் 26ஆம் திகதி மெல்பேர்ணில் தொடங்குகிறது. இந்த நிலையில், இந்தியாவுக்கு எதிரான எஞ்சிய இரு டெஸ்ட் போட்டிகளுக்கான அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் இருந்து தொடக்க ஆட்டக்காரரான நாதன் மெக்ஸ்வீனி நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக சாம் கான்ஸ்டாஸ் இடம் பிடித்துள்ளார்.

மேலும், இந்த அணியில் காயம் காரணமாக ஜோஷ் ஹேசில்வுட் இடம் பெறவில்லை. அதேசமயம் அணியில் ஜை ரிச்சர்ட்சன், பியூ வெப்ஸ்டர், சீன் அப்போட் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். இந்த அணிக்கு தலைவராக பட் கம்மின்ஸும், துணை தலைவராக ட்ராவிஸ் ஹெட் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய அணி விவரம் வருமாறு, பட் கம்மின்ஸ் ஸ்டீவ் ஸ்மித், ட்ராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா, சாம் கான்ஸ்டாஸ், மார்னஸ் லபுஸ்சேன், மிட்செல் மார்ஷ், அலெக்ஸ் ஹெரி, ஜோஷ் இங்கிலிஸ், மிட்செல் ஸ்டார்க், சீன் அப்போட், ஸ்காட் போலண்ட், பியூ வெப்ஸ்டர், ஜை ரிச்சர்ட்சன், நாதன் லயன் ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர். (எ)

# 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அசத்தல் வெற்றி

ஒருநாள் தொடரை இழந்தது தென்னாபிரிக்கா



டர்பன், டிசெ.21

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான், ஒருநாள் தொடரை கைப்பற்றி அசத்தியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நடைபெற்றது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 49. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 329 ஓட்டங்கள் சேர்த்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக முகமது ரிஸ்வான் 80 ஓட்டங்கள் எடுத்தார். தென்னாபிரிக்கா தரப்பில் குவேனா மபகா 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 330 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, பாகிஸ்தானின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது. இறுதியில் தென்னாபிரிக்கா 43. 1 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 248 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. இதன் மூலம் 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் ஒருநாள் தொடரை கைப்பற்றி அசத்தியது.

தென்னாபிரிக்கா தரப்பில் கிளாசென் 97 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் ஷாஹின் அப்ரிடி 4 விக்கெட்கள், நசீம் ஷா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி நாளை 22ஆம் திகதி நடைபெறுகிறது. (எ)

# அஸ்வின் இப்படி விடைபெற அனுமதித்திருக்க மாட்டேன்

கபில் தேவ் ஆதங்கம், அதிர்ச்சி



சென்னை, டிசெ.21

அஸ்வின் இப்படி விடைபெற்று செல்ல நான் அனுமதித்திருக்க மாட்டேன் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ரவிச்சந்திரன் அஸ்வின் திடீரென ஓய்வு பெற்றமை பலரையும் அதிர்ச்சி கொள்ள செய்துள்ளது. இந்த நிலையில், “இந்திய கிரிக்கெட் அணியின் தலைசிறந்த வீரர்களில் ஒருவரான அஸ்வினின் ஓய்வு முடிவு எனக்கு அதிர்ச்சி யாக இருந்தது. அவரது இந்த முடிவு இரசிகர்கள் மத்தியில் பரவலாக ஏமாற்றத்தை தந்துள்ளது. அவரது முகத்தில் அந்த வேதனையை நான் பார்த்தேன். அவர் மகிழ்ச்சியாக இல்லை. அது வருத்தம் தான். அவருக்கு சொந்த மண்ணில் திருப்திகரமான போட்டியை ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அவர் கொஞ்சம் காத்திருந்து சொந்த மண்ணில் ஓய்வை அறிவித்திருக்கலாம். அது குறித்து நான் அறிய விரும்புகிறேன். அவருக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். தேசத்துக்காக 106 டெஸ்ட் போட்டிகளில் விளையா டிய மகத்தான வீரர். இந்திய கிரிக்கெட் அணிக்கு அவர் அளித்த பங்களிப்பை வேறு யாராலும் ஈடு செய்ய முடி யாது. நான் அங்கு (அவுஸ்திரேலியாவில்) இருந்திருந் தால் அஸ்வின் இப்படி விடைபெற்று செல்ல அனுமதித் திருக்க மாட்டேன்”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்கும்பானில்...

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த பயணித்த இளைஞர் படுகாய மடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள் ளார். காரின் பின்பக்கம் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், காரின் சாரதிக்கு காயங்கள் எவையும் ஏற்பட வில்லை.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## சித்திரைப்...

கலந்துரையாடினார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. அதனையடுத்து மல்வத்து மகாநாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

அதனையடுத்து அஸ்கிரிய விகாரைக்கு சென்ற ஜனாதிபதி அநுரகுமார அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வண வரகாகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் வண ஆனமடுவே தம்மதஸ்ஸி தேரர், பிரதி பதிவாளர் வண. நாரம்பனாவே ஆனந்த தேரர்,முதியங்கன ரஜமகா விகாரையின் விகாராதிபதி வண.முருத்தெனியே தம்மரத்ன தேரர் உள்ளிட்டோர் இதன்போது வருகை தந்திருந்ததுடன் அவர்கள் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியின் எதிர்கால பணிகளுக்கு ஆசி வழங்கினர்.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன, பாராளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்க உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்து கொண்டனர். (அ)

## 13 குறித்து...

நேற்று இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டின் அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதலால் அது பற்றி இந்தியாவுடன் கலந்துரையாட வேண்டிய தேவை இருக்கவில்லை.

அரசியலமைப்பின் பிரகாரம் செயற்பட வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு.

அதனடிப்படையில் அடுத்த வருட முற்பகுதியில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளோம். ஏற்கனவே கோரப்பட்ட வேட்பு மனுக்கள் அல்லாமல் புதியவர்களுக்கு வாய்ப்பளிப்பது தொடர்பில் நாடாளுமன்ற அனுமதி பெறப்படவேண்டும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்து வதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

மேலும், மாகாண சபை தேர்தலும் நடத்தப்படும். எல்லை நிர்ணயத்தில் ஏற்பட்டுள்ள சட்ட ரீதியான சிக்கல்களை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அது தொடர்பிலான சட்டத்தை நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் மீள்திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

அதன் பின்னர் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும்.

அரசியலமைப்பின் பதின்மூன்றாது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியாவுடனான கூட்டு அறிக்கையில் தகவல் வெளியிடப்படவில்லை. ஏனென்றால் அவ்வாறு கலந்துரையாடுவதற்கான தேவை கிடையாது. அரசாங்கம் என்ற வகையில் அரசியலமைப்பின் பிரகாரம் நாம் செயற்பாடுகளை முன்னெடுப்போம் - என்றார். (அ)

## முன்னாள்...

ஒருவரிடம் 15 இலட்சம் ரூபாவை பெற்று மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளராக செயற்பட்டிருந்த குலசிங்கம் திலீபன் கடந்த 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்தார்.

எவ்வாறாயினும், அவர், குறித்த கட்சியில் இருந்தும் கட்சியின் சகல பதவிகளிலும் இருந்தும் விலகுவதாக அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வாஸ்...

நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாக பிரதிவாதிகளுக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தை அறிவிப்பதற்காக குறித்த வழக்கின் பிரதிவாதிகளான முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து குணவர்தன மற்றும் குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐவரும் சிறைச்சாலை அதிகாரிகளினால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

குறித்த தண்டனைக்கு எதிராக பிரதிவாதிகள் முன்வைத்த மேன்முறையீட்டு மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே பிரதிவாதிகளுக்கு அறிவித்தார்.

அதன்படி, கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய அமர்வினால் அவர்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளதாக பிரதிவாதிகளுக்கு நீதியரசர் ஆதித்ய பட்டபெந்திகே தெரிவித்துள்ளார். (அ)

## அரசியல்...

நிலவுகிறது. அடுத்த ஆண்டு முதல் வட்டியில் ஒரு பகுதியை செலுத்த வேண்டும். பிற வெளிநாட்டு கடன்களையும் செலுத்த வேண்டியுள்ளன.

இதை அடைவதற்காக நமது நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்புக்களை உயர் மட்டத்தில் வெற்றிகரமாக பேண வேண்டும். இதன் பொருட்டு, சுற்றுலாத் துறையானது அந்நியச் செலாவணியை ஈட்டும் முக்கிய ஏற்றுமதி வணிகங்களில் ஒன்றாகப் பெயரிடப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் அதேவேளை, அதனால் சமூகத்தில் ஏற்படும் சமூக பாதிப்புகளைக் குறைப்பதற்கும், தடுப்பதற்கும் சமச்சீரான வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கடந்த 3 ஆண்டுகளாக மதுபான உரிமப் பத்திரம், பியர் உரிமப் பத்திரம், மதுபானசாலை உரிமைப் பத்திரம் ஆகியன சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக அல்லாமல் அரசியல் நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்காக வழங்கப்பட்டன.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதாக கூறிக் கொண்டு, அரசியல்வாதிகளை பலப்படுத்தவும், கட்சி தாவும் நடவடிக்கையையும் மேற்கொள்வுமே இவை வழங்கப்பட்டு வந்தன.

இந்தக் கலாசாரத்திலிருந்து விலகி நல்லொழுக்கமுள்ள நாகரீகமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் நாடு பொருளாதார அராஜகத்தை எதிர்கொண்டுள்ளது. அதுமட்டுமின்றி சில பிற்போக்கு சக்திகள் மற்றும் செயல்முறைகளால் சமூக ரீதியான பாதிப்புகளையும் சந்தித்து வருகின்றன.

எனவே, முறையான கொள்கை உருவாக்கத்துடன், கட்டளைச் சட்டங்கள் மற்றும் வரைவுச் சட்டங்கள் மூலம் மது இல்லாத சிந்தனை மற்றும் கருத்து உருவாக்கப்பட... [illegible]

# அரசின் எதிர்காலத் திட்டங்களுக்கு அமெ. முழுமையான ஒத்துழைப்பு!

### தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு



முன்னெடுக்கும் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பை நல்கும் எனவும் உறுதியளித்தார்.

கொழும்பு, டிசெ. 21

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்த அமெரிக்கா தயாராக இருப்பதாகத்தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தற்போதைய அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்களுக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பை நல்கும் எனவும் உறுதியளித்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல உள்ளிட்ட அதிகாரிகளை நேற்று கொழும்பில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்த தயாராக இருப்பதாகத்தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இலங்கை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற வேண்டும் என்பது அமெரிக்காவின் எதிர்பார்ப்பாகும் எனவும் குறிப்பிட்டார்.

அதற்காக தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அமெரிக்கா முழுமையான ஒத்துழைப்பை நல்கும் எனவும் உறுதியளித்தார்.

மேலும் அரசியல் தலையீடுகள் இன்றி நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக புதிய அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளை பாராட்டுவதாகத்தெரிவித்த தூதுவர் ஜூலி சங், போதைப்பொருள் மற்றும் உலகபாதாளக்குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கத்தயார் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையில் இடம்பெறும் சைபர் குற்றங்களை தடுப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளையும் வழங்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மியன்மார் அகதிகள் குறித்து அரசு விரைவில் நடவடிக்கை



கொழும்பு, டிசெ. 21

மியன்மார் அகதிகளுடன் கரையொதுங்கிய படகில் இருந்தோருக்கு அவசியமான உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் அவசியமான ஏனைய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இவ்விவகாரம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி, அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் வெகுவிரைவில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அண்மைய இந்திய விஜயத்தின் போது ஆராயப்பட்ட விடயங்கள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் மியன்மார் நாட்டின் அகதிகள் 102 பேருடன் படகொன்று கரையொதுங்கிய நிலையில், இவ்விடயத்தில் அரசாங்கம் முன்னெடுக்கவிருக்கும் நடவடிக்கை குறித்து அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத், இவ்விடயம் தமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டவுடன் அக்கப்பலில் இருந்தவர்களுக்கு அவசியமான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை வழங்குவதற்கும், அவசிய மான வசதிகளை செய்துகொடுப்பதற்கும் தாம் நடவடிக்கை எடுத்ததாக தெரிவித் தார்.

அதேவேளை இது உள்நாட்டு விவகாரம் அல்ல, மாறாக பிறிதொரு நாட்டுடன் தொடர்புடைய சர்வதேச விவகாரம் எனச் சுட்டிக்காட்டிய அவர், எனவே எமது நாட்டினால் கைச்சாத்திடப்பட்டிருக்கும் சர்வதேச பிரகடனங்களுக்கு அமைவாகவே இதனை அணுக முடியும் என்று குறிப்பிட்டார்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி, இயலுமான வரை விரைவில் இதுகுறித்த நிரந்தர தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் விளக்கமளித்தார். (அ)

## எட்கா ஒப்பந்தம்...

இடையில் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் அமுலில் உள்ளது. அதனை புதுப்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

"எட்கா உடன்படிக்கை தொடர்பில் நீண்டகாலமாக பேச்சுகள் உள்ளன. இந்தப் பேச்சுகளை முன்னோக்கி கொண்டு செல்லவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எட்காவை கைச்சாத்திட்டு விட்டதாக சில அரசியல்வாதிகள் [illegible] ...ன்றனர்.

எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு உடன்படிக்கையிலும் நாம் கைச்சாத்திட மாட்டோம். இருநாடுகளுக்கும் சாதகமான உடன்படிக்கைகளையே நாம் முன்மொழிகிறோம். எட்கா உடன்படிக்கையில் சில தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகிறது. எட்கா தொடர்பில் எந்தவொரு இறுதி இணக்கப்பாடும் இல்லை. அடுத்தகட்ட பேச்சுகள் குறித்தும் இணக்கப்பாடுகள் எதுவும் எட்டப்படவில்லை."- எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## அமைச்சர் உபாலி பன்னிலகே எம்.பி பதவிக்கு தகுதியற்றவர்!

### நீதிமன்றில் மனு தாக்கல்

கொழும்பு, டிசெ. 21

கிராமப்புற மேம்பாடு சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்று அறிவிக்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமூக மற்றும் அரசியல் ஆர்வலர் ஒசல ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவின்படி, அவர் பாராளுமன்ற உறுப்பின ராக அறிவிக்கப்பட்டு பின்னர் அமைச்சரவை அமைச்ச ராக நியமிக்கப்பட்ட நேரத்தில் ருஹுணு பல்கலைக் கழகத்தின் ஊழியராக இருந்தார் என்ற விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் குசானி அனுசா ரோஹணதீர, ருஹுணு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

உபாலி பன்னிலகே ஒரு பொதுக் கூட்டுத்தாபனத் தின் அதிகாரியாக இருந்ததால் அரசியலமைப்பின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பாராளுமன்றத் தில் அமர்ந்து வாக்களிப்பதற்கோ அவர் தகுதியற்றவர் என்று மனுவில் வாதிடப்பட்டுள்ளது. (அ)

## ஹிமாலி அருணாதிலக மீதான குற்றச்சாட்டுகள் பொய்யானவை

### அமைச்சர் விஜித ஹேரத் பதில்

கொழும்பு, டிசெ. 21

ஆஸ்திரேலிய தூதரகத்தின் முன்னாள் பிரதித் தூது வராக கடமையாற்றிய ஹிமாலி அருணாதிலக மீதான குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை என அமைச் சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஒரு ஊழியருக்கு சம்பளம் வழங்குவதில் அவர் எந்த மோசடியும் செய்யவில்லை.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை யின் நிரந்தரப் பிரதிநிதியாக ஹிமாலி அருணாதிலக தற்போது பணியாற்றி வருகிறார். அவர் இன்னும் நாட்டுக்காக உழைத்து வருகிறார் - என்றார். (அ)

## பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் அபாயத்தில் அசோக ரன்வல



கொழும்பு, டிசெ. 21

முன்னாள் சபா நாயகர் அசோக ரன்வல தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க வாய்ப்புகள் இருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் சட் டத்தரணி அகலங்க உக்வத்த தெரிவித்துள் ளார்.

தனது கலாநிதி பட்டச் சான்றிதழை சமர்ப்பிக்க தவறினால் இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப் பிட்டார்.

ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தனது கல்வித் தகமையை வெளிப்படுத்த நேரம் வழங்குமாறு அசோக ரன்வல கோரியுள்ளார்.

அதற்மைய, அவருக்கு நேரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்குள் அவர் தனது சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கவில்லை என்றால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும் - என்றார். (அ)

# மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல்நிலை!

### அவகாசம் கோருகிறது அரசு



கொழும்பு, டிசெ. 21

**உள்ளூராட்சிமன்ற தேர்தல் அடுத்த வருட ஆரம்பத்தில் இடம் பெறும் என்றும் பழைய வேட்புமனுக்களுக்கு பதிலாக புதிய வேட்புமனுக்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

தேர்தல் ஆணைக்குழு திகதி அறிவித்ததும் தேர்தலை நடத்துவற் கான நடவடிக்கைகள் இடம் பெறும் என்றும் அவர் குறிப்பிட் டார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

இதேவேளை, மாகாணசபை தேர்தலை நடத்துவதில் எல்லை நிர்ணய சிக்கல் இருப்பதாகவும், புதிய எல்லை நிர்ணயத்துக்கு செல்வது தொடர்பில் பாராளு மன்றத்தினூடாக இறுதி தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர்,

எல்லை நிர்ணய பிரச்னைக்கு தீர்வு கிடைத்தவுடன் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார். (அ)

# வெள்ளைவானில் கடத்தப்பட்ரோர் முதலைகளுக்கு இரையானார்கள்!

### கூறுகிறார் ராஜித சேனாரட்ன

கொழும்பு, டிசெ. 21

வெள்ளை வானில் கடத்தியவர்களை கொலை செய்து அந்த சடலங்களை முதலைகளுக்கு இரையாக்கி யமை உண்மை என்பது நிரூபணமாகியுள்ளதாக முன் னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்ட நபர்கள் கொலை செய்யப்பட்டு, சில உடல் பாகங்களை அகற்றி சடலங்களை முதலைகளுக்கு உணவாக வழங்கியமை விசாரணைகள் மூலம் உறுதி யாகியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காண லில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இந்த விடயத்தை குற்ற விசாரணைப் பிரிவினர் தமக்கு அறியத் தந்ததாக முன்னாள் அமைச்சர் ராஜித தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் தனிப்பட்ட பாது காப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி, பின்னர் குற்ற புலனாய்வு பிரிவில் இணைந்து கொண்ட நபர் இந்த உண்மைகளை மூடி மறைக்க உதவியுள்ளார்.

நல்லாட்சி காலத்தில் இந்த விசாரணைகள் ஸ்தம் பிதம் அடைந்தமைக்கு ஒரு சிலரின் தேவையற்ற பதற் றமே காரணமாகும். அப்போதைய பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவின் பிரதான அதிகாரியொருவரின் செயற்பாடுகளும் இந்த விசாரணைகளை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு இடையூறாக அமைந்தது.

எவ்வாறெனினும், இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டனை விதிப்பதற்கு அரசாங்கமொன்றுக்கு ஐந்து ஆண்டு கால அவகாசம் போதுமானதல்ல - என்றார். (அ)

# நத்தாரை முன்னிட்டு பாதுகாப்புக்கு 40,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள்

கொழும்பு, டிசெ. 21

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் தேவாலயங்கள் மற்றும் மத ஸ்தலங்களின் பாதுகாப்பிற்காக சுமார் 40,000 பொலிஸ் உத்தியோ கத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் சுமார் 6500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ள தாகவும், திருடுபவர்களை கைது செய்வதற்கு 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிவில் உடையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளதாகவும் மனதுங்க கூறினார்.

போக்குவரத்து நெரிசலை தடுக்கும் வகையில் கொழும்பு நகரில் போக்குவரத்தை கையாள்வதற்கு மாத்திரம் சுமார் 600 பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத் தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் ஆடைகள் மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்யச் செல்லும் போது மக்கள் தமது பணம், கையடக்கத் தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் போன்றவை தொடர்பில் அவதான மாக இருக்க வேண்டுமென புத்திக மனதுங்க தெரிவித் தார். (அ)

# மைத்திரியின் மன்னிப்பு பெற்றவரை நாடு கடத்தி வர இன்டர்போல் உதவி!

கொழும்பு, டிசெ. 21

றோயல் பார்க் கொலைக் குற்றவாளி டொன் ஷ்ரமந்த ஜூட் அந்தோனி ஜயமஹவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் தீர்மானம் தன்னிச்சையானது மற் றும் சட்டப்படி செல்லாது என உயர் நீதிமன்றம் அண் மையில் தீர்ப்பளித்தது. ஜயமஹ மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியாக கருதப்படுவதால், அவரை நாடு கடத்துவதற்கு தேவையான நடவடிக்கை களை எடுக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் சம்பந்தப் பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டது.

றோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீதி பத் மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் பிரயந்த பெர் னாண்டோ ஆகிய மூன்று நீதிபதிகள் குழாம் முன்னிலை யில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இன்டர்போலின் உதவியுடன் ஜூட்டைக் கண்டுபிடிப்ப தற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

றோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி சிறிசேன எடுத்த தீர்மானத்தின் சட்டபூர்வமான தன் மையை எதிர்த்து பெண்கள் மற்றும் ஊடகக் கூட்ட மைப்பு இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தது. பொதுமன்னிப்பு கிடைத்த சிறிது நேரத்திலேயே ஜூட் ஜயமஹ நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. நீதிமன்ற அனு மதியின்றி டொன் ஷ்ரமந்த ஜூட் அந்தோனி ஜயமஹ நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்குமாறு குடி வரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத் திற்கு உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தி ருந்தது. எவ்வாறாயினும், ஜனாதிபதியின் பொது மன் னிப்பு வழங்கப்பட்டதையடுத்து, ஜயமஹ நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.